நமது முரசு

# புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் பத்மஸ்ரீ விருதுபெற்ற முனுசாமியின் சொற்பொழிவு நிகழ்ச்சி

## சுடுமண் சிற்பக்கலை குறித்து செயல்விளக்கமும் அளித்தார்



புதுச்சேரி, பிப். 8-

புதுச்சேரி மண்டல இந்திரா காந்தி தேசியக்கலை மையத்தின் சார்பில் "தென்னிந்திய பாரம்பரிய சுடுமண் சிற்பக்கலை" என்ற தலைப்பில் சொற்பொழிவு அரபிந்தோ ஆசிரமத்தில் நிகழ்ந்தது. பத்ம ஸ்ரீ விருது பெற்ற வி.கே.முனுசாமி சுடு மண் சிற்பமானது தென்னிந்தியாவின் சக்தி வாய்ந்த கலைகளுள் ஒன்றாகும் என்று சொல்லி அதன் தொன்மையையும், சிறப்பையும் சொல்லி சொற்பொழிவாற்றினார். இந்த சொற்பொழிவின் இடையில் களிமண்ணாலான பாரம்பரியமிக்க கலைப் பொருட்களை செய்து செயல் விளக்கம் அளித்தார்.

இந்த கண்காட்சி கூடத்தில் பத்ம ஸ்ரீ முனுசாமியின் பாரம்பரியமிக்க கலை வாழ்வை பற்றிய புகைப்படங்கள் மற்றும் அவர் செய்த சிற்பங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பெரும் திரளான மாணவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக ஸ்ரீ அரபிந்தோ ஆசிரமத்தை சேர்ந்த மாத்ரிபிரசாத்தும் மகாபலிபுரம் பிரபல சிற்பியும், எழுத்தாளரும், ஓவியருமான கலைமாமணி திருஞானம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை ஆற்றினார்கள்.

இந்த நிகழ்வில் இந்திரா காந்திதேசியகலைமையத்தின் புதுச்சேரி மண்டல இயக்குனர் முனைவர். கோபால்ஜெ பத்மஸ்ரீ முனுசாமியின் திறனையும், அவரின் அயராத உழைப்பையும் சுட்டிக்காட்டி பெருமைசேர்த்தார். மேலும் இவர் பேசும்போது, முனுசாமி மிகச் சிறிய சிற்பங்கள் முதல் 42 அடி உயரம் வரை உள்ள சிலைகளை வடிக்கிறார். களிமண் சிற்பக் கலையை மிகவும் நேசிக்கும் இவர் கடந்த 30 வருடங்களாக வேலை இல்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறார். இதுவரைப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இவரிடம் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் 'பாண்டிச்சேரி கலைப் பயிற்சி அகம்' (Pondichery Craft Foundation) என்ற அமைப்பின் மூலம் இதுவரை மூன்று லட்சம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை ஐந்து முறை தேசியவிருதுகள் பெற்றுள்ளார். 2005ஆம் ஆண்டு யுனெஸ்கோ விருது இவருக்கு வழங்கப்பட்டது. அதிலும் சில்ப குரு உள்ளிட்ட "seal of excellence" என்ற பெருமைமிகு அடையாளத்தை இவர் தயாரிக்கும் பொருட்களுக்கு அளித்துள்ளனர். இது ஒரு சர்வதேச அங்கீகாரம் ஆகும்.

இவர் தயாரித்த பல சிற்பங்கள் பல்வேறு நாடுகளின் அருங்காட்சியகங்களில் இருக்கின்றன என்று கூறி இத்தகைய சிறப்பு வாய்ந்த கலைஞர் புதுவைக்கும், இந்த மண்ணுக்கும் கிடைத்த பெருமை என்று கூறினார்.

இவ்விழாவின் ஏற்பாட்டை புதுவை மண்டல இந்திரா காந்திதேசியமையத்தின் திட்ட உதவியாளர் ஓவியர் ராஜா சிறப்பாக செய்திருந்தார்.

இறுதியில் மண்டல மையத்தின் கணக்கு அதிகாரி கார்த்திகேயன் நன்றி கூறினார்.

தினமலர்

தினமலர்
புதுச்சேரி | ஞாயிறு | 9.2.2020

# சுடுமண் சிற்பக்கலை சொற்பொழிவு



புதுச்சேரி அரபிந்தோ ஆசிரமத்தில் மண்டல இந்திராகாந்தி தேசிய கலை மையத்தின் சார்பில் தென்னிந்திய பாரம்பரிய சுடுமண் சிற்பக்கலை சொற்பொழிவு மற்றும் புகைப்பட கண்காட்சி நடந்தது

**புதுச்சேரி, பிப். 8–**

புதுச்சேரி மண்டல இந்திரா காந்தி தேசியக்கலை மையம் சார்பில் தென்னிந்திய பாரம்பரிய சுடுமண் சிற்பக்கலை குறித்த பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள முனுசாமியின்சொற்பொழிவு நிகழ்ச்சி அரபிந்தோ ஆசிரமத்தில் நேற்று நடந்தது.

அரபிந்தோ ஆசிரம மாத்ரிபிரசாத், மகாபலிபுரம் சிற்பி திருஞானம் வாழ்த்தி பேசினர். இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் புதுச்சேரி மண்டல இயக்குனர் கோபால், பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு பெற்ற முனுசாமியின் திறன் மற்றும் அவரின் அயராத உழைப்பையும் சுட்டிக்காட்டி பேசினார்.

இதில், முனுசாமி, தென்னிந்தியாவின் சக்தி வாய்ந்த கலைகளுள் ஒன்றான சுடுமண் சிற்பத்தின் தொன்மை மற்றும் அதன் சிறப்பு குறித்த பேசினார். தொடர்ந்து, களிமண்ணாலான பாரம்பரியமிக்க கலைப்பொருட்களை செய்வது குறித்த செயல் விளக்கம் அளித்தார்.

தொடர்ந்து, முனுசாமியின் பாரம்பரிய கலை வாழ்வை பற்றிய புகைப்படங்கள் மற்றும் சிற்பங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதில், மாணவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை இந்திரா காந்தி தேசிய மைய திட்ட உதவியாளர் ஓவியர் ராஜா செய்திருந்தார். மைய கணக்கு அதிகாரி கார்த்திகேயன் நன்றி கூறினார்.

தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 9 பிப்ரவரி 2020

# சுடுமண் சிற்பக் கலை சொற்பொழிவு



சுடுமண் சிற்பக் கலை தொடர்பாக சொற்பொழிவாற்றிய சுடுமண் சிற்பக் கலைஞர் வி.கே.முனுசாமி.

**புதுச்சேரி, பிப்.8:** இந்திரா காந்தி தேசியக் கலை மையத்தின் புதுவை மண்டலம் சார்பில், தென்னிந்திய பாரம்பரிய சுடுமண் சிற்பக் கலை சொற்பொழிவு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பத்மஸ்ரீ விருத்துக்கு தேர்வு பெற்ற வி.கே.முனுசாமி சுடுமண் சிற்பக் கலையின் தொன்மை, சிறப்பு ஆகியவை குறித்து எடுத்துக் கூறி சொற்பொழிவாற்றினார். இந்த சொற்பொழிவின் இடையே களிமண்ணாலான பாரம்பரியம் மிக்க கலைப் பொருள்களை செய்து அவர் செயல் விளக்கம் அளித்தார்.

கண்காட்சிக் கூடத்தில் முனுசாமியின் பாரம்பரியம் மிக்க கலை வாழ்வைப் பற்றிய புகைப்படங்கள் மற்றும் அவர் செய்த சிற்பங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வில் திரளான மாணவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தைச் சேர்ந்த மாத்ரி பிரசாத், மகாபலிபுரத்தைச் சேர்ந்த சிற்பியும், எழுத்தாளரும், ஓவியருமான கலைமாமணி திருஞானம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.

நிகழ்வில் இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் புதுவை மண்டல இயக்குநர் ஜெ.கோபால், சுடுமண் சிற்பக் கலைஞர் முனுசாமியைப் பாராட்டிப் பேசினார். மண்டல மையத்தின் கணக்கு அதிகாரி கார்த்திகேயன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை இந்திரா காந்தி தேசியக் கலை மையத் திட்ட உதவியாளர் ஓவியர் ராஜா செய்திருந்தார்.